(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW10 |
| Name | : | **திருமதி.முத்துமாரி** |
| Husband's Name | : | திரு.மணிகண்டன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd May 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது காரைக்குடி தாலுகா, கொத்தடி குரூப்பில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2020ம் தேதி பானாவயல் குரூப் நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 13.02.2020-ல் மதியம் சுமார் 1.30 மணியளவில் IGNOAP list (இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வு உதவி தொகை List) கொடுப்பதற்காக வந்திருந்தேன். கூட்டமாக இருந்ததால் வருவாய் ஆய்வாளர் அறைக்கு பின்புறம் இருந்த

ANITHACHRISTY J Digitally signed by ANITHACHRISTY J Date: 2026.05.22 15:11:33 +0530

அறையில் நான் அமர்ந்திருந்தேன். மதியம் சுமார் 2.00 மணியளவில் சிவகங்கை, ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் போலிசார் அங்கு வந்தார்கள்.

2. லஞ்ச ஒழிப்பு துறையிலிருந்து வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களை லஞ்ச பணம் ரூ.1000/- பெற்றுக் கொண்ட காரணத்தினால் கைது செய்யவதற்காக வந்திருப்பதாகவும் கூறினார்கள். என்னை யார் என்றும், எதற்காக வந்திருக்கிறேன் என்றும் என்னை கேட்டார்கள். என்னை அரசு தரப்பு சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். நானும் ஒப்புக்கொண்டேன். ஒரு கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார்கள். அதில் ஆஜர் எதிரியை வலது கையை நனைக்கச் சொன்னார்கள். அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, லேபிள் ஒட்டி, வலது கை கரைசல் என்று எழுதப்பட்டு அதில் சாட்சிகள் இருவரிடமும், வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களிடமும், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள்.

3. அதேபோல் மற்றொரு கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்து அதில் ஆஜர் எதிரியை இடது கையை நனைக்கச் சொன்னார்கள். அந்த கரைசல் எந்த நிறமாற்றமும்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.22 15:11:41 +0530

அடையவில்லை. அந்த கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, லேபிள் ஒட்டி, இடது கை கரைசல் என்று எழுதப்பட்டு அதில் சாட்சிகள் இருவரிடமும், வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களிடமும், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள்.

4. பணம் எங்கே என்று போலிசார் எதிரியிடம் கேட்டபோது மேஜை விரிப்பின் மீது இருப்பதாகவும் தான் அந்த பணத்தை கேட்கவில்லை, அவராகத்தான் வைத்தார் என்று எதிரி கூறினார். அந்த மேஜை விரிப்பில் இரண்டு ரூ.500/– நோட்டுகள், மொத்தம் ரூ.1000/– இருந்தது. அந்த மேஜை விரிப்பானது சிவப்பு, பச்சை நிறங்களில் இருந்தது, Angry Bird என்று எழுதப்பட்டிருந்தது. மேற்படி மேஜை விரிப்பிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு ரூ.500/– நோட்டுக்களின் எண்களையும் போலிசாருடன் வந்த அரசு சாட்சிகள் மூலம் ரூபாய் நோட்டுக்களின் எண்கள் மகஜருடன் ஒப்பிடப்பட்டது. மேற்படி ரூபாய் நோட்டுக்களின் எண்களும், மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்த எண்களும் ஒத்துப்போயிருந்தன.

5. அந்த மேஜை விரிப்பின் மீது ரூபாய் நோட்டுகள் இருந்த பகுதியையும் எடுத்து சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்து அதில் நனைத்தார்கள். அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.22 15:11:47 +0530

கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, லேபிள் ஒட்டி, "C" Table Cloth என்ற லேபிள் எழுதி அதில் சாட்சிகள் இருவரிடமும், வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களிடமும், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். மகஜர் தயார் செய்யப்பட்டது. அதில் இரண்டு அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் **கைப்பற்றுதல் மகஜரில் அனைத்து பக்கங்களிலும் உள்ள 3 வது கையொப்பம்** என்னுடையது ஆகும். அ.த.சா.ஆ–5 ஆன கைப்பற்றுதல் மகஜரில் உள்ள **எனது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை கைது செய்தனர். இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

“Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct”

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.22 15:11:55 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.